1973 டிசம்பர் 1]

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா : மனுநீதித் திட்டம் நல்ல பயனைத் தந்திருக்கிறது. அதற்கான புள்ளிவிவரங்களே இருக்கின்றன.

Number of petitions received during 1972–73 ...	112
Favourable orders passed	12
On the Spot	10
Subsequent	10
Rejected	2
Forwarded to other departments	94
Pending	4

இப்படி கொடுக்கப்பட்ட மனுக்களுக்கு பரிகாரம் காணப்பட்டிருக் கிறது. எல்லா மாவட்டங்களுக்கும் இதைத் தீவிரமாகச் செயல் படுத்தவேண்டுமென்றே சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டும் வருகிறார்கள்.

வேதாரண்யம் பெயர் மாற்றம்

*554 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

வேதாரண்யம் என்னும் பெயரை அதன் பண்டைய தமிழ்ப் பெயரான 'திருமறைக்காடு' என்று மாற்றி அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

[முற்பகல் 10-00]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த வேதாரண்யம் என்ற பெயர், இதற்கு முன்னாலே திருமறைக்காடு என்று தமிழ்ப் பெயராலே வழங்கப்பட்டு, இப்பொழுது இந்தப் பெயர் வந்ததாகத் தெரிய வருகிறது இந்த மன்றத்தில் பல தடவை கேட்டுக் கொண்டதற்கிணங்க, மயிலாடுதுறை என்று சிறப்பாகக் கூறப்பட்ட பெயர்தான் இன்றைய மாயூரத்திற்கு. தமிழ் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள பெயரையே பண்டைய தமிழ்ச் சொல்லாலே

வழங்கப்பட்ட இடங்களை மீண்டும் அதே தமிழ்ச் சொற்களாலே வழங்கப்பட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேதாரணியம், மாயூரம் போன்ற பகுதிகளிலிருந்து வரப்பட்ட அந்த கோரிக்கை பரிசிலிக்கப்பட்டு, இப்பொழுது பெயர் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லையென்று அரசு முடிவு செய்திருக்கிறது.

பயிரிடும் உள் குத்தகைதாரர்கள்

***555 வின—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள் குத்தகைதாரர் தான் பயிரிடும் சம்சாரிதான் என்று ஆக்ட் 9/69-ல் சீர்திருத்த சட்டம் பிறந்து இருந்த போதிலும் அமலுக்கு வந்ததாக அறிவிப்பு செய்யப்படவில்லையென்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினவுக்கு இடமில்லை.

திரு ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, இந்த உள் குத்தகைதாரர் தான் பயிரிடும் சம்சாரி என்பதைப்பற்றி, குத்தகை உறவுப் பதிவு தனி தாசில்தார் நியமிக்கப்பட்டு, அவரிடம் இவைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது, 'பார்ம் 5' என்ற பாரத்தில் பூர்த்திசெய்து கொடுக்கப்பட்டவை தாசில்தார் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அது சீக்கிரத்தில் கவனிக்கப்படாமல் இருப்பதால் இது மாதிரி பதிவு செய்யப்பட வேண்டிய குத்தகை சம்சாரி யார் என்று விவசாயிகள் அறிய முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, குறிப்பிட்ட காலத்தில், விரைவில் விசாரணை செய்து, அவற்றை அளிக்க நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.